# 12-ஆம் வகுப்பு - பொருளியல்

# மெல்ல கற்கும் மாணவர்களுக்கான வழிகாட்டி கையேடு

# இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. **பேரியல் பொருளியல் இலக்கணம் தருக?**

பேரியல் பொருளியல் என்பது பொருளாதரத்தின் ஒட்டு மொத்தமாக அல்லது முழுமையாக படிப்பது. (எ-கா) தேசிய வருவாய், வேலைவாய்ப்பு

2. **பணவீக்கம் என்றால் என்ன?**

பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிக்கும். அல்லது பணத்தின் மதிப்பு குறைந்து, பொருட்களின் விலைகள் அதிகரிக்கும்.

3. **பொருளாதாரம் (அமைப்பு) என்பதன் பொருள் யாது?**

பொருளாதார அமைப்பு என்பது மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக்கொள்ளும் முறையை குறிப்பது - A.J. பிரவுன்.

4. **வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.**

வளர்ந்த, வளரத, முன்னேறாத, வளரும் பொருளாதார அமைப்புகள்.

5. **முதலாளித்துவம் என்றால் என்ன?**

பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் பங்கு அதிகமாகவும், அரசின் பங்கு குறைவாகவும் இருக்கும். (எ-கா) அமெரிக்கா

6. **பொருளாதார மாதிரியின் இலக்கணம்**

   1. பொருளாதார மாதிரி என்பது பொருளாதார நடவடிக்கையின் உண்மை சூழலை எளிமையாக புரிய வைப்பதாகும்.
   2. பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது,

7. **வருமானத்தின் வட்ட ஓட்டம்- வரையறு?**

வருமானத்தின் வட்ட ஓட்டம் என்பது குடும்பங்கள், நிறுவனங்கள், அரசு மற்றும் நாடுகள் ஆகியவற்றிடையே பணம், பண்டம், பணி ஆகியவற்றின் ஓட்டத்தை விளக்குவது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**8. தேசிய வருவாய் பொருள் மற்றும் இலக்கணம் தருக?**

தேசிய\ வருவாய் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பாகும்.

**9. GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக?**

GNP= GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்

**10. GNP-க்கும் NDP-க்கும் உள்ள வேறுபாடு?**

NNP = GNP - தேய்மான கழிவு NDP = GDP - தேய்மான கழிவு

**11. தனி நபர் வருமானம் என்றால் என்ன?**

தனி நபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் கிடைக்கும் மொத்த வருமானம் ஆகும்.

**12. தேசிய வருவாய் கணக்கீட்டில் "சுயநுகர்வு" எவ்வாறு சிரமத்தை தருகிறது.**

விவாசயிகள் தங்களின் உற்பத்தியின் ஒரு பகுதியை விற்பனை செய்யாமல் சுய நுகர்விற்காக ஒதுக்கி வைப்பது தேசிய வருமான கணக்கீட்டில் சிரமத்தை தருகிறது.

**13. முழு வேலைவாய்ப்பு வரையறு?**

முழு வேலை நிலை என்பது வேலை செய்ய விருப்பமும், திறமையும் இருப்பவர்களுக்கு கண்டிப்பாக வேலை கிடைக்கும் நிலையை குறிக்கும்.

**14. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?**

1. பருவ கால வேலையின்மை நிலவுகிறது.
2. மறைமுக வேலையின்மை நிலவுகிறது.

**15. உடன்படில்லா வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக?**

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் உடன்பாடில்லா வேலையின்மை நிலவுகிறது.

**16. சே விதியின் எடுகோள்களை பட்டியலிடுக?**

1. முழு வேலைநிலை நிலவும்
2. சந்தையில் நிறைவு போட்டி நிலவும்
3. நீண்ட காலத்தை அடிப்படையாக கொண்டது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**17. விளைவு தேவை என்றால் என்ன?**

விளைவு தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும். ED = Y = C+ I = வெளியீடு = வேலைவாய்ப்பு

**18. தொகு அளிப்பின் கூறுகள் யாவை?**

**தொகு அளிப்பு = C + S + T + $R_f$**

**C** - மொத்த நுகர்வு செலவு

**S** - மொத்த தனியார் சேமிப்பு

**T** - நிகர வரி வசூல்

**$R_f$** - உதவி தொகை

**19. நுகர்வு சார்பு என்றால் என்ன ?**

வருவாய்க்கும், நுகர்வுக்கும் உள்ள தொடர்பே நுகர்வு சார்பு எனப்படும். C = f (Y)

**20. நுகர்வு நாட்டம் என்றால் என்ன?**

வருவாய்க்கும், நுகர்வுக்கும் உள்ள தொடர்பே நுகர்வு நாட்டம் எனப்படும்.

**21. சராசரி நுகர்வு நாட்டம் (APC) வரையறு?**

வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும்.

$$APC = \frac{C}{Y}$$

**22. இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC) ?**

வருமான மாற்றத்திற்கும், நுகர்வு மாற்றத்திற்கும் இடையேயான வீதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம் எனப்படும்.

$$MPC = \frac{\Delta C}{\Delta Y}$$

**23. சராசரி சேமிப்பு நாட்டம் (APS) வரையறு?**

வருமானத்திற்கும் சேமிப்பிற்கும் இடையே உள்ள வீதமே சராசரி சேமிப்பு நாட்டமாகும்.

$$APS = \frac{S}{Y}$$

**24. இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (MPS) ?**

வருமான மாற்றத்திற்கும், சேமிப்பு மாற்றத்திற்கும் இடையேயான வீதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம் எனப்படும்.

$$MPS = \frac{\Delta S}{\Delta Y}$$

**25. பெருக்கி வரையறு?**

தேசிய வருமான மாற்றத்திற்கும், முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி எனப்படும். $K = \Delta Y / \Delta I$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**26. முடுக்கி வரையறு?**

" தூண்டப்பெற்ற முதலீடிருக்கும், தொடக்கத்தில் நுகர்வு செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள விகிதம் முடுக்கி எனப்படும்.

முடுக்கி $(\beta) = \frac{\Delta I}{\Delta C}$

**27. பணத்தின் இலக்கணம் தருக?**

பணம் எதை செய்கிறதோ அதுதான் பணம் - வாக்கர்

**28. பண்டமாற்று என்றால் என்ன?**

பண்டங்களுக்கு பண்டம் மாற்றிக் கொள்ளும் முறையே பண்ட மாற்று முறை என அழைக்கப்பட்டது.

**29. பண்டப்பணம் என்றால் என்ன?**

பணத்தை போன்றே பண்டத்தை பரிமாற்று பொருளாக் பயன்படுத்துவதை பண்டப்பணம் என்கிறோம். (எ-கா) ரோமம், உப்பு, அரிசி, கோதுமை பணமாக பயன்படுத்துதல்.

**30. பொன் திட்டம் என்றால் என்ன?**

1. ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருந்தது.
2. பண அலகின் வாங்கும் திறன் = பொன் பணத்தின் எடை அளவு

**31. நெகிழிப்பணம் என்றால் என்ன?**

நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்ட நெகிழிப்பணம் ஆகும். நடைமுறையில் காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றாகும். (எ-கா) கடன் அட்டை, பற்று அட்டை

**32. தேக்க வீக்கம் என்றால் என்ன?**

பொருளாதார வளர்ச்சியில் தேக்கநிலையும், வேலையின்மையும் அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும்.

**33. வணிக வங்கிகள் என்பதனை வரையறு?**

வணிக வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புகளை பெற்று நிறுவனங்களுக்கு குறுகிய கால கடனளித்து லாப நோக்கில் செயல்படும் நிதி அமைப்பு.

**34. கடன் உருவாக்கம் என்றால் என்ன?**

மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவினை அதிகரிப்பது கடன் உருவாக்கம் ஆகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

### 35. மைய வங்கி என்பதினை வரையறு?

மைய வங்கி என்பது நாட்டின் தலைமை வங்கியாகும். இது வங்கிகளின் வங்கி என்று அழைக்கப்படுகின்றது. நாட்டின் பண அதிகார அமைப்பாகும்.

### 36. வெளி அங்காடி நடவடிக்கை என்றால் என்ன?

மைய வங்கி பொதுச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை விற்பதும், திரும்ப வாங்குவதும் வெளிச்சந்தை நடவடிக்கை எனப்படுகிறது.

### 37. பன்னாட்டு பொருளியல் என்றால் என்ன?

பன்னாட்டு பொருளியல் என்பது பொருட்கள் மற்றும் பணிகள் நாடுகளிடையே பரிவர்த்தனை செய்வது பற்றிய பாடப்பிர்வு ஆகும்.

### 38. பன்னாட்டு வணிகம் இலக்கணம் தருக.

பன்னாட்டு வணிகம் என்பது பண்டங்கள் மற்றும் பணிகள் இரண்டு அல்லது அதற்க்கு மேற்ப்பட்ட நாடுகள் பரிமாற்றம் செய்து கொள்வது ஆகும்.

### 39. வாணிப வீதத்தினை விளக்குக?

ஏற்றுமதி பொருளின் விலைக்கும் இறக்குமதி பொருளின் விலைக்கும் இடையான விகிதமே வாணிப வீதம் எனலாம்.

### 40. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?

ஒரு அலகு வெளிநாட்டு பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டுப் பணம் கொடுக்கிறோம் என்பது ஆகும்.

### 41. சிறப்பு எடுப்புரிமை என்பதன் பொருள் கூறுக.

இது IMF உறுப்பு நாடுகளுக்காக வெளியிடக் கூடியது. இது தாள் தங்கம் என்று அழைக்கப்படுகிறது

### 42. ஆசியானின் இரண்டு நோக்கங்களை கூறுக?

1. உறுப்பு நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சியை விரைவுப்படுத்துதல்.
2. உறுப்பு நாடுகளுக்கு கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியை அமைத்துக் கொடுப்பது.

### 43. எங்கு மற்றும் எப்பொழுது சார்க் தலைமையகம் அமைக்கப்பட்டது.

1. சார்க் தலைமையகம் நேபாள் தலைநகரம் காத்மண்டு-வில் உள்ளது.
2. இது ஜனவரி 16, 1987- ல் செயல்பட துவங்கியது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**44. உலக வங்கி குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்கள் யாவை?**

1. பன்னாட்டு நிதிக் கழகம்
2. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு

**45. சுற்றுச்சூழல் என்பதன் பொருள் ?**

நம்மை சுற்றியுள்ள காற்று, நீர், நிலம், இயற்கை வளங்கள், தாவரங்கள் அனைத்து உயிரினங்கள் அடங்கிய தொகுப்பு சுற்றுச்சூழல் எனப்படும்.

**46. சூழலியல் என்றால் என்ன?**

உயிரினங்களுக்கு இடையேயான பரஸ்பர உறவும், அவைகளின் சுற்றுச்சூழல் பற்றி படிக்கும் இயல் ஆகும்.

**47. தலா கரியமில வாயு அதிகம் வெளியேறும் நாடுகள் யாவை?**

அமெரிக்கா, ஜெர்மனி, கனடா, இங்கிலாந்து, சவுதி அராபிய.

**48. சுற்றுச்சுழல் பொருட்கள் என்றால் என்ன? உதாரணம் தருக.**

தனியார் சொத்துரிமை இல்லாத பொருட்கள் சுற்றுச்சூழல் பொருட்கள் எனப்படும். (உ.ம்) பொது பூங்காக்கள், தூய காற்று, ஆறுகள்.

**49. ஒலி மாசுவினை கட்டுபடுதுவதற்கான வழி முறைகள்?**

1. ஒலி தடைகளை ஏற்படுத்துதல்
2. ஒலி பெருக்கிகளை கட்டுப்படுத்துதல்
3. போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு.

**50. விதை பந்து என்பதன் பொருள் கூறுக?**

ஒரு விதை உரம் கலந்த களிமண்ணால் மூடிவைக்கப்பட்டு பிறகு உலர்தப்படுகிறது. இதை எங்கு வேண்டுமோ அங்கு விதிக்கலாம்.

**51. பொருளாதார முன்னேற்றம் வரையறு?**

நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் நிகழும் நல்ல மாற்றங்களை பொருளாதார முன்னேற்றம் எனலாம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 52. பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளை குறிப்பிடுக.

1. நாட்டின் மொத்த உற்பத்தி 2. தலா மொத்த நாட்டு உற்பத்தி
3. நலன் 4. சமூக குறியீடுகள்

## 53. பொருளாதார திட்டமிடுதலின் இலக்கணம்?

பொருளாதார திட்டமிடுதல் என்பது தனியார் துறை உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகள் கூட்டாக கட்டுப்படுத்துவது குறிப்பதாகும். - ராபின்ஸ்

## 54. நிதி ஆயாக் பற்றி குறிப்பு வரைக?

இந்திய அரசு திட்ட குழுவுக்கு மாற்றாக ஜனவரி 1 2015- ல் அமைக்கப்பட்டது. இந்திய பிரதமரே நிதி ஆயோகின் தலைவராவர்.

## 55. புள்ளியியல் என்றால் என்ன?

புள்ளியியல் என்பது மதிப்பீடுகளை மற்றும் நிகல்தகவுகளைப் பற்றிய அறிவியல் - போடிங்டன்.

## 56. புள்ளியியலின் வகைகள் யாவை ?

1. விவரிப்பு புள்ளியியல்
2. உய்த்துணர்வு புள்ளியியல்

## 57. பொருளாதார அளவையியல் என்றால் என்ன?

பொருளாதார அளவையியல் என்பது பொருளியல், கணிதம், மற்றும் புள்ளியியல் ஆகியவை உள்ளடக்கியது.

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# 3- மதிப்பெண் வினாக்கள் :

## 1. பொருளாதார அமைப்பின் வகைகள்?

1. முதலாளித்துவ பொருளாதாரம்
2. சமத்துவ பொருளாதாரம்
3. கலப்பு பொருளாதாரம்

## 1. சமத்துவத்தின் குறைகளை கூறுக.

1. சிகப்பு நாடா மற்றும் அதிகார அமைப்பு 2. ஊக்கமின்மை
3. அதிகாரம் குவிதல் 4. தேர்வு செய்வதில் சுதந்திரம் குறைவு

## 3. கலப்பு பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை கூறுக?

1. பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்து இருத்தல்
2. பொருளாதார திட்டமிடல்
3. பொருளாதார திட்டமிடலுக்கு தீர்வு
4. சுதந்திரமும், கட்டுப்பாடும்.

## 4.இரு துறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக :

இரு துறை சுழல் ஓட்ட மாதிரி பொருளாதரத்தில் இல்லத்துறை மற்றும் நிறுவனத்துறை என்ற இரு துறைகள் மட்டும் காணப்படும்.

## 5. தலை வீத வருமானம் பற்றி குறிப்பு வரைக?

1. ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.
2. தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்க கிடைப்பது தலா வருமானம்

$$\text{தலாவருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

## 1. J.B. சே விதியில் விளைவுகளை பற்றி குறிப்பு வரைக

1. அதிக உற்பத்திக்கோ, வேலையின்மைக்கோ வாய்ப்பு இல்லை
2. அரசின் தலையீடு இருக்காது
3. வட்டி வீத நெகிழ்வு தன்மை சேமிப்பிற்கும், முதலீட்டிற்கும் சமநிலையை உண்டாகும்.

## 2. தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளை கூறுக.

தொழில் முனைவோர்கள் வேறுபட்ட வேலை நிலையில் உற்பத்தி செய்ததை விற்பதன் மூலம் எதிர்பார்க்கும் வருவாய். **AD = C+I+G (X-M)**

**1. C = நுகர்வு தேவை 2. I = முதலீட்டு தேவை**
**3. G = அரசுச் செலவு 4. (X-M) = நிகர ஏற்றுமதி**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**3. தன்னிச்சை முதலீடு தூண்டடப்பட்ட முதலீடு வேறுபாடு?**

| தொ எண் | தன்னிச்சையான முதலீடு | ஊக்குவிக்கப்பட்ட முதலீடு |
|---|---|---|
| 1 | தன்னிச்சையானது | திட்டமிடப்பட்டது |
| 2 | வருவாயைப் பொறுத்து நெகிழாதது | வருவாயைப் பொறுத்து நெகிழ்வது |
| 3 | நல நோக்கமுடையது | இலாப நோக்கமுடையது |

**4. முடுக்கிக்கும், பெருகிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.**

| முடுக்கி | பெருக்கி |
|---|---|
| தூண்டடப்பெற்ற முதலீடு மாற்றத்திற்கும், நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள விகிதம். | வருமான மாற்றத்திற்கும், முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள விகிதம் |
| முடுக்கி $(\beta) = \frac{\Delta I}{\Delta C}$ | K= $\Delta Y / \Delta I$ |

**5. மிகை பெருக்கி விளக்குக :**

1. K மற்றும் B- ஐ இணைத்து மிகைபெருக்கியை ஹிக்ஸ் உருவாக்கினார்.
2. மிகை பெருக்கி எளிய பெருக்கியை விட சிறந்தது.
3. மிகைப்பெருக்கி தன்னிச்சை முதலீடு மற்றும் தூண்டடப்பட்ட முதலீடு இரண்டையும் கொண்டிருக்கும்.

**6. பண அளிப்பு என்றால் என்ன?**

1. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டின் பணப்புழக்க அளவே பண அளிப்பு
2. வட்டி வீதம், விலைவாசி பண அளிப்பை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.
3. RBI பண அளிப்பை M1, M2, M3 மற்றும் M4 அளவீடுகிறது.

**7. பண அளிப்பை தீர்மானிக்கும் காரணிகள் :**

1. ரொக்க வைப்பு விகிதம்
2. ரொக்க இருப்பு வைப்பு வீதம்
3. ரொக்க இருப்பு வீதம்
4. சட்டப்பூர்வ நீர்மை விகிதம்.

**8. பணவீக்கத்தின் வகைகள் :**

1. தவழும் பண வீக்கம் 2. நடக்கும் பணவீக்கம்
3. ஓடும் பணவீக்கம் 4. தாவும் பணவீக்கம்
5. காகித பணவீக்கம் 6. கடன் பணவீக்கம்
7. பற்றாக்குறை பணவீக்கம் 8. தேவை இழுப்பு பணவீக்கம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**9. <u>நபார்டின் பணிகள் யாவை ?</u>**

1. விவசாயம், சிறுதொழில், மற்றும் குடிசை தொழில்களுக்கு மறுகடன் வழங்குதல்
2. மாநில, வட்டார கூட்டுறவு வங்கிகள் மற்றும் நிலவள வங்கிகளுக்கு குறுகிய, மத்திய கால கடன் வழங்குகிறது.
3. மாநில அரசுக்கு 20 ஆண்டு நீண்ட கால கடன் வழங்குகிறது.
4. கூட்டறவு வங்கிகளை ஆய்வு செய்யும் பணி செய்கின்றது.

10. **<u>கடன் கட்டுப்பாட்டு முறைகள்</u>** :

1. **கடன் அளவு கட்டுப்பாட்டு முறைகள்:**

(i) வங்கி விகிதம் (ii) வெளிசந்தை நடவடிக்கை (iii) ரொக்க இருப்பு விகிதம்

2. **கடன் தன்மை கட்டுப்பாட்டு முறைகள் :**

(i) கடன் பங்கீடு (ii) நேரடி நடவடிக்கை (iii) விளம்பரபடுதுதல்

**11. <u>இந்திய தொழில் நிதிக் கழகத்தின் பணிகள் யாவை?</u>**

1. இந்திய ருபாய் மற்றும் வெளிநாட்டு பணத்தில் நீண்ட கால கடன் வழங்குகிறது.
2. இறக்குமதி, ஏற்றுமதி பணத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது
3. வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து பெறப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் அளிக்கிறது.

**12. <u>பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை கூறுக?</u>**

1. கருப்புப் பணத்தினை ஒழிப்பது
2. லஞ்சத்தை தடுப்பது
3. தீவிரவாதத்திற்கு பணம் செல்வதை தடுப்பது
4. கள்ளப்பணத்தினை தடுப்பது.

**13. <u>பன்னாட்டு பொருளியலின் உள்ளடக்கம்?</u>**

1. தூய வாணிப கோட்பாடு 2. கொள்கை சச்சரவுகள்

3 .பன்னாட்டு வாணிப கூட்டறவு ஒன்றியங்கள்

4. பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள்.

**14. <u>பன்னாட்டு வாணிபத்தில் தொன்மை கோட்பாட்டிற்கும், புதிய கோட்பாட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு :</u>**

| வ.எண் | தொன்மை கோட்பாடு | புதிய கோட்பாடு |
|---|---|---|
| 1. | உழைப்பு சார்ந்த மதிப்பு கோட்பாட்டை அடிப்படையாக கொண்டது. | பொது மதிப்பு கோட்பாட்டை அடிப்படையாக கொண்டது. |
| 2. | ஒரு காரணி (உழைப்பு) | இரு காரணி (உழைப்பு, மூலதனம்) |
| 3. | உழைப்பாளரின் உற்பத்தி திறன் வேறுபாடு | உற்பத்தி காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடு |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**15. இறக்குமதி பங்களவு என்றால் என்ன?**

1. இறக்குமதி பங்களவு என்பது இறக்குமதி அளவை நிர்ணயிப்பது ஆகும்.
2. பங்களவு நிர்ணயித்து இறக்குமதியை குறைக்கலாம்
3. அயல் நாட்டுச் செலுத்து சமமின்மையை நீக்க இறக்குமதி கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது.

**16. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக?**

1. விற்பனையை விரிவுபடுத்துதல்
2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்
3. வாணிக பரவலாக்கம்
4. போட்டி இடர்களை குறைதல்

**17. ஐ.எம்.எப். (IMF)-ன் கடன் வழங்கும் திட்டங்களில் மூன்று குறிப்பிடுக.**

1. அடிப்படை கடன் வசதி
2. விரிவாக்கப்பட்ட கடன் வசதி
3. தாங்கி இருப்பு வசதி

**18. பிரிக்ஸ் மாநாடு 2018-ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக?**

1. 10வது உச்சி மாநாடு தென் ஆப்ரிக்காவில் ஜூலை 2018ல் நடைப்பெற்றது.
2. உள்ளடக்கிய வளர்ச்சி, வணிக பிரச்சனைகள், நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவை முக்கிய நிகழ்சிகளாகும்.

**19. சார்க் பணிகளை கூறுக?**

1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்
2. உறுப்பு நாடுகளுக்கு இடையிலான உறவை மேம்படுத்துதல்
3. ஏழ்மையை ஒழிப்பது
4. பயங்கரவாத செயல்களை தடுப்பது.

**20. ஆசியன் அமைப்பின் சாதனைகளை பட்டியலிடுக.**

1. ஆசியன் உறுப்பு நாடுகளுக்கு இடையே தடையற்ற வாணிபம், போக்குவரத்து வழியை உருவாக்குவது.
2. பொருளாதார மேம்பாடு இடைவெளியை குறைத்தது
3. முதலீட்டு வாய்ப்புகளை பெற்று தந்தது.
4. பல துறைகளில் ஒத்துழைப்பை வளர்த்தது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 21. வரி விதிப்பு விதிகளை விவரிக்க ?

1. **சமத்துவ விதி** - ஏழைகளுக்கு குறைவான வரி, பணகரர்களுக்கு அதிகமான வரி
2. **வசதி விதி** - வரி செலுத்தும் காலம் மக்களின் வசதிக்கேற்ப இருக்க வேண்டும்.
3. **தெளிவு விதி** - வரி பற்றியான தெளிவு இருக்க வேண்டு, (எங்கு, எப்பொழுது).
4. **சிக்கன விதி** - அரசு வரி வசூலிக்கப்பதற்கான செலவு குறைவாக இருக்க வேண்டும்

## 22. நவீன அரசின் பணிகள் யாவை?

1. பாதுகாப்பு பணி
2. நீதிப்பணி
3. சமூகப்பணி
4. கட்டமைப்பு பணி
5. சமூக நீதி பணி.

## 23. வரியின் மூன்று பண்புகள் :

1. அரசுக்கு கட்டாயம் செலுத்தப்படக்கூடிய ஒன்று
2. அரசிடம் எவ்வித நன்மையையும் எதிர்பாராமல் செலுத்த வேண்டியது.
3. ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.

## 24. முதன்மை பற்றாக்குறை என்றால் என்ன?

1. முதன்மை பற்றாக்குறை= நிதிப்பற்றாக்குறை-வட்டி செலுத்துதல்
2. இவை அரசின் உண்மை சுமையை காட்டும்
3. அரசின் கடனுக்கான வட்டி செலுத்துதளுக்கான தேவையை குறிக்கும்.

## 25. பொதுக் கடனை திரும்ப செலுத்துவதற்கான மூன்று முறைகளை கூறுக?

1. கடனை மாற்றுதல்
2. பகுதியாக செலுத்துதல்
3. வட்டிவீதத்தை குறைதல்

## 26. பல்வேறு வகையான காற்று மாசுகளை விளக்குக?

1. **உட்புற காற்று மாசு** : மனிதர்கள் வீட்டிற்குள் தீங்கு விளைவிக்க கூடிய அசுத்தங்கள் கலந்து இருப்பது (எ-கா) சமையலின் போது மாசுபடுதல்
2. **வெளிப்புற காற்று மாசு** : காற்று மண்டலத்தில் திட திரவ மற்றும் வாயு ஆகிய அசுத்தங்கள் கலந்து இருப்பது. (எ-கா) தொழிற்சாலைகளால் காற்று மாசுபடுதல்.

## 27. நீர் மாசுக்கான கரணங்கள் யாவை?

1. கழிவு நீர் வெளியேற்றம்
2. எண்ணெய் சிந்துதல்
3. அமில மழை
4. புவி வெப்பமயமாதல்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**28. இ-கழிவுகள் என்பதன் பொருள் தருக :**

1. இ- கழிவுகள் என்பவை மின்னணு கழிவுகள் ஆகும்.
2. மீண்டும் பயன்படுத்த முடியாத மின்னணு சாதனங்களை இ-கழிவுகள் என்கிறோம்.
3. (எ-கா) TV, கணினி, FAN, மொபைல் போன்கள்.

**29. நில மாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களை குறிப்பிடுக.**

நில மாசு : சுற்றுசூழலில் கொட்டப்படும் திட திரவ மற்றும் வாயு பொருட்கள் நிலத்தின் தன்மையை கெடுத்து விடுதல் நிலமாசு ஆகும்.

காரணங்கள் : 1. காடுகளை அழித்தல் 2. கழிவுகளை மண்ணில் புதைத்தல்.

**30. பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?**

1. மனித வளம் 2. தொழில்நுட்ப அறிவு 3. அரசியல் சுதந்திரம்
4.சமூக அமைப்பு 5. ஊழலற்ற நிர்வாகம் 6. பரம்பரை சொத்துரிமை

**31. நிதி ஆயோக் பணிகள் :**

1. கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாச்சி
2. நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களை பங்கெடுக்க செய்தல்
3. பரவலாக்க திட்டமிடல் 4. உகந்ததாக்குதல்
5. சச்சரவு தீர்த்தல் 6. திறன் உருவாக்குதல்

**32. திட்டமிடுதலுக்கு ஆதரவான கருத்துக்கள் விவரி ?**

1. திட்டமிட்ட பொருளாதாரமே சந்தை இயக்கத்தை சரி செய்யும்
2. வேலையின்மை அகற்ற திட்டமிடுதல் அவசியம்
3. சமமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்த திட்டமிடுதல் அவசியம்.

**33. புள்ளியியலின் பணிகள் யாவை?**

1. புள்ளியியல் விவரங்களை துல்லியமாக வழங்குகிறது.
2. ஒப்பிடுகள் செய்ய உதவுகிறது.
3. பரந்த விவரங்களை சுருக்கி தருகின்றது.
4. மதிப்பீடு செய்ய உதவுகிறது.

**34. பொருளாதார அளவியலின் நோக்கங்களை கூறுக?**

1. பொருளாதார நடவடிக்கைகளை முன் கணிப்பு செய்ய உதவுகிறது.
2. மாறிகளுக்கிடையே உறவுகளை மீண்டும் நிருபிக்க உதவுகிறது.
3. புதிய கோட்பாடுகளை நிறுவுவதற்கு உதவுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# 5- மதிப்பெண் வினாக்கள்

## 1. பேரியல் பொருளியலின் பரபெல்லையை விவரி?

1. **தேசிய வருவாய்** - தேசிய வருவாய் என்பது தேசிய வருவாய் கனகிடுதல் மற்றும் தேசிய வருவாயின் துறைகள் போன்றவை ஆகும்.
2. . **பணவீக்கம்** - பணவீக்கம் என்பது பொதுவான விலை தொடர்ந்து அதிகரிப்பதை குறிக்கும்.
3. **வாணிப சுழற்சி** - ஒரு நாட்டின் வாணிப சுழற்சி மாற்றங்களை தெரிந்து கொள்ள முடிகின்றது.
4. **வறுமை மற்றும் வேலையின்மை** - நாட்டில் வறுமையும், வேலையின்மையும் மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது.
5. **பொருளாதார வளர்ச்சி** - ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி, முன்னேற்றம் அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றை புரிந்து கொள்ள முடியும்.

## 2. முதலாளித்துவம், சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை கூறுக.

| வ.எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | அரசு உரிமை | தனியார் மற்றும் அரசு உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | இலாபம் மற்றும் சமூக நலன் |
| 3. | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| 4. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் மற்றும் அரசு நிறுவனம் |
| 5. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாடுடன் சுதந்திரம் |

## 3. தேசிய வருவாய் கணக்கிடும் முறைகள் :

1. உற்பத்தி முறை 2. வருமான முறை 3. செலவு முறை

## 4. தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?

1. மாற்றுச்செலுதுதல்கள்
2. தேய்மானங்கள் கணக்கிடுவதில் சிக்கல்
3. பணம் செலுத்தப்படாத சேவைகள்
4. கருப்பு பணம்
5. சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**5.வேலையின்மையின் வகைகளை விவரி?**

1. பருவ கால வேலையின்மை 2. வாணிப சுழல் வேலையின்மை

3. கற்றோர் வேலையின்மை 4. தொழில்நுட்ப வேலையின்மை

5. மறைமுக வேலையின்மை 6. அமைப்புசார் வேலையின்மை

**6. J.B.சே விதியின் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.**

1. அதிக உற்பத்திக்கோ வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை
2. அரசின் தலையீடு இருக்காது.
3. வட்டி வீதம் நெகிழும் தன்மை, சேமிப்பிற்கும், முதலீட்டிருக்கும் சமநிலையை உண்டாக்கும்.

**7.தொன்மையியதையும், கீன்ஸியத்தையும் ஒப்பிடுக**

| வ.எண் | கீன்ஸியம் | தொன்மையம் |
|---|---|---|
| 1. | குறுகிய கால சமநிலை | நீண்ட கால சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3. | அரசு தலையீடு உண்டு | அரசு தலையீடு இல்லை |
| 4. | வட்டிவீதம் மாறிக்கொண்டே இருக்கும் | வட்டிவீதம் மாறது. |
| 5. | தேவையே அளிப்பை உருவாக்குகிறது | அளிப்பு தன் தேவையை உருவாக்குகிறது |
| 6. | பற்றாக்குறை வரவு செலவு திட்டம் | சமநிலை வரவு செலவு திட்டம் |
| 7. | குறை வேலைவாய்ப்பு நிலவும் | முழு வேலைவாய்ப்பு நிலவும் |

**8. நுகர்வு சார்பின் அக மற்றும் புறக்காரணிகளை விளக்குக.**

**அக காரணிகள் :**

1. முன்னெச்சரிக்கை நோக்கம் 2. எதிர்பார்க்கும் நோக்கம்
3. கணிக்கும் நோக்கம் 4.முன்னேறும் நோக்கம்
5.வாணிப நோக்கம்.

**புறக்காரணிகள் :**

1. வருமான பகிர்வு 2. விலை அளவு
3. கூலி அளவு 4. வட்டி வீதம்
5. நுகர்வு கடன்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**9. MEC - க்கும் MEI - க்கும் உள்ள வேறுபாடுகள் ?**

| வ.எண் | MEC | MEI |
|---|---|---|
| 1. | இது ஒரு இருப்பு கருத்து | இது ஒரு ஓட்ட கருத்து |
| 2. | வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது | வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீட்டு அளவு அளக்கப்படுகிறது |
| 3. | மூலதனத்தின் அளிப்பு விலையை பொருத்து அமைகிறது. | மூலதனத்தின் தேவை மற்றும் விலையை பொருத்து அமைகிறது. |

**10. பணத்தின் பணிகளை விளக்குக?**

1. பணம் ஓர் பரிவர்த்தனை கருவி
2. பணம் ஓர் மதிப்பின் அளவுகோல்
3. பணம் ஓர் மதிப்பின் நிலைகலன்
4. பணம் வருங்கால செலுத்துகைக்கான நிலை மதிப்பு
5. கடனுக்கான அடிப்படை.

**11. பணவீக்கத்திற்கான காரணங்கள் :**

1. பண அளிப்பு உயர்வு 2. உயர்ந்து வரும் செலவுகள்
3. நுகர்வோர் செலவு அதிகரித்தல் 4. மலிவுப் பணக்கொள்கை
5. பற்றாக்குறை நிதியாக்கம் 6. கருப்பு பணம்

12. **வணிக சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விளக்குக.**

1. பூரிப்பு 2. பின்னிறக்கம் 3. மந்தம் 4. மீட்சி

**13. வணிக வங்கியின் பணிகளை விளக்குக .**

1. வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல் - 1. கேட்பு வைப்புகள், 2. சேமிப்பு வைப்புகள்
2. கடன் வழங்குதல் - ரொக்க கடன் , மிகை பற்று
3. காசோலைகளை பணமாக்குதல்
4. வருமானத்தை பெறுதல்
5. பாதுகாப்பு பெட்டக வசதி
6. பயண காசோலைகள் வழங்குதல்.

**14. இந்திய ரிசர்வு வங்கியின் பணிகளை விவரி ?**

1. பண அதிகார அமைப்பு 2. காகித பண வெளியீடு
3. அரசுக்கான வங்கி 4. வங்கிகளின் வங்கி
5. வங்கி உரிமங்கள் வழங்குபவர் 6. அந்நிய செலவாணி பாதுகாவலன்

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**15. பணக்கொள்கையின் நோக்கங்கள் யாவை?**

1. பணத்தின் நடுநிலைத் தன்மை 2. விகித நிலைத்தன்மை
3. விலை நிலைத்தன்மை 4. முழு வேலைவாய்ப்பு
5. பொருளாதார வளர்ச்சி 6. செலுத்துச் சமநிலையை பேணுதல்

**16. உள்நாட்டு வாணிபம், பன்னாட்டு வாணிபம் வேறுபாடு**

| வ.எண் | உள்நாட்டு வாணிபம் | பன்னாட்டு வாணிபம் |
|---|---|---|
| 1. | ஒரு நாட்டிற்குள் நடைபெறும் வாணிபம் | பல நாடுகளுக்கிடையே நடைபெறும் வாணிபம் |
| 2. | ஒரே பணம் பயன் படுத்தப்படுகிறது | பல நாட்டு பணங்கள் பயன்படுத்தப்படுகிறது. |
| 3. | பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர தடை இல்லை | பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர தடைகள் உண்டு |
| 4. | புவி அமைப்பு, கால நிலை ஒரே மாதிரியாக இருக்கும் | புவி அமைப்பு, கால நிலை வேறுப்படும் |
| 5. | உழைப்பு மற்றும் மூலதனம் இடம் பெயர தடை இல்லை | உழைப்பு மற்றும் மூலதனம் இடம் பெயர தடை உண்டு |

**17. பன்னாட்டு பணநிதியத்தின் நோக்கங்களை விளக்குக :**

1. உறுப்பு நாடுகளிடையே பரிவர்த்தனையில் பணவியல் ஒத்துழைப்பே மேம்படுத்துதல்.
2. பன்னாட்டு வாணிபம் வேகமாக வளர உதவுவது
3. நாணய மாற்று விகிதம் நிலையாக இருக்க செய்தல்
4. செலவாணி கட்டுப்பாடுகளை குறைதல்
5. பன்னாட்டு நீர்மை பிரச்சனைக்கு தீர்வு காண்பது.

**18. உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.**

1. பன்னாட்டு வாணிகத்தின் வளர்ச்சியை ஊக்குவித்தல்
2. உற்பத்திக்கு முதலீட்டுக்கான கடன் உதவி
3. கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல்
4. வெளிநாட்டுத் தனியார் முதலீட்டிற்கு உதவுதல்
5. தொழில் நுட்ப சேவைகள்

**19. நேர்முக வரி மற்றும் மறைமுக வரி வேறுபாடு :**

| வ.எண் | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| 1. | இது வருமானத்தின் மீது விதிக்கப்படுவது | இது பண்டங்கள் மீது விதிக்கப்படுவது |
| 2. | வரி ஏய்ப்பு உண்டு | வரி ஏய்ப்பு இல்லை |
| 3. | வரி சுமையை மாற்ற முடியாது | வரி சுமையை மாற்ற முடியும் |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| | | |
|---|---|---|
| 4. | வருமான வரி | விற்பனை வரி |
| 5. | பணவீக்கத்தை குறைக்கும் | பணவீக்கத்தை ஏற்ப்படுத்தும் |

**20. பொது நிதியின் எல்லைகளை விளக்குக.**

1. **பொது வருவாய்** - அரசுக்கு பல்வேறு வழிகளில் இருந்து வரக்கூடிய வரி வருவாய் மற்றும் வரியற்ற வருவாய்
2. **பொதுச்செலவு** - அரசாங்கம் மக்கள் நலன் கருதி செய்யப்படக்கூடிய செலவு பொதுச்செலவு எனப்படும்.
3. **பொதுக்கடன்** - அரசு பொது மக்களிடம் இருந்தோ, பொது நிறுவனங்களிடம் இருந்தோ பெறுவது பொதுக்கடன் எனப்படும்.
4. **நிதி நிர்வாகம்** - அரசின் நிறுவனங்கள், அரசின் பணிகள் சார்ந்த நிதி நிர்வாகம் ஆகும்.
5. **நிதிக்கொள்கை**. - வரிகள், மானியங்கள், பொதுக்கடன், பொதுச்செலவு ஆகியவை நிதிக்கொள்கையின் கருவிகள் ஆகும்.

**21. மறைமுக வரியின் நன்மைகள் யாவை?**

1. பரந்து காணப்படுதல்
2. சமத்துவம்
3. சிக்கனத்தன்மை
4. உடலுக்கு தீங்கான பொருட்களின் நுகர்வை குறைக்கிறது.
5. வசதியானது

**22. நிதிக் கொள்கையின் கருவிகள் எவை? விளக்குக?**

4. **வரி விதித்தல்** :- வரிகள் மக்களிடம் இருந்து பெறப்படுகின்றது. இது நேர்முக வரியாகவோ அல்லது மறைமுக வரியாகவோ இருக்கும்.
5. **பொதுச் செலவு** - அரசாங்கம் மக்கள் நலன் கருதி செய்யப்படக்கூடிய செலவு பொதுச்செலவு எனப்படும்.
6. **பொதுக்கடன்**: - அரசு பொது மக்களிடம் இருந்தோ, பொது நிறுவனங்களிடம் இருந்தோ பெறுவது பொதுக்கடன் எனப்படும்.

**23. அரசு செலவு அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை?**

1. மக்கள் தொகை வளர்ச்சி
2. பாதுகாப்பு செலவு
3. அரசு மானியங்கள்
4. வளர்ச்சித் திட்டங்கள்
5. நகரமயமாக்கல்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 24. புற விளைவுகள் என்ற கருத்து மற்றும் வகைப்பாடு விளக்குக.

**புற விளைவுகள் விளக்கம் :**

தனி நபர்களின் நுகர்ச்சி அல்லது உற்பத்தி ஆகிய பொருளாதார நடவடிக்கையின் காரணமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கு பெறாத சமுதாயத்தில் உள்ள மற்றவர்களுக்கு ஏற்பாடு செலவு.

**வகைப்பாடு : -**

1. நேர்மறை நுகர்ச்சி புறவிளைவு
2. எதிர்மறை நுகர்ச்சி புறவிளைவு
3. நேர்மறை உற்பத்தி புறவிளைவு
4. எதிமறை உற்பத்தி புறவிளைவு

## 25. நீடித்த அல்லது வளம்குன்ற வளர்ச்சி

**நீடித்த வளர்ச்சின் முக்கியத்துவம்:**

1 இப்போதுள்ள தலைமுறையினர் மட்டுமின்றி, எதிர்காலத் தலைமுறையினிருக்கும் தேவையான வளத்தை வைத்து விட்டு அடைகின்ற மேம்பாடு நீடித்த நிலையான மேம்பாடு என்கிறோம்.

**நோக்கங்கள் :**

1. வறுமையற்ற நிலை
2. பட்டினியில்ல நிலை
3. சிறந்த உடல்நலம்
4. தரமான கல்வி
5. பாலின சமத்துவம்
6. தூய்மையான குடிநீர், சுகாதாரம்
7. தரமான வேலை
8. ஏற்றத் தாழ்வு குறைப்பு
9. கடல்வளங்களை பாதுகாத்தல்
10. காடுகள், நிலம் அழிவை தடுத்தல்.

## 26. பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவரி :

1. இயற்கை வளங்கள்
2. சந்தை அளவு
3. பன்னாட்டு வாணிகம்
4. பொருளாதார அமைப்பு முறை
5. கட்டமைப்பு மாற்றம்
6. நிதியில் முறை

## 27. பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரி?

1. மக்களாட்சி திட்ட,ம் - அனைத்து நிலையிலும் மக்கள் பங்கெடுத்து கொள்ளும் திட்டம்
2. சர்வதிகார திட்டம் - அரசின் முழு கட்டுபாட்டின் கீழ் வரும் திட்டம்
3. வழிகாட்டும் திட்டம் - திட்ட குழு வழிகாட்டுதலின் படி இத்திட்டம் இருக்கும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

4. தூண்டும் திட்டம் - இலக்குகளை நிர்ணயம் செய்து ஊக்கமளிக்கும் திட்டம்
5. குறுகிய கால திட்டம் - 1 ஆண்டிற்குள் கால அளவு இருப்பது
6. நடுத்தர கால திட்டம் - 3 - 7 ஆண்டுகள் கால அளவு இருப்பது\
7. நீண்ட கால திட்டம் - 10 ஆண்டுகளுக்கு மேல் கால அளவுள்ள திட்டங்கள்.

## 28. திட்டமிடுதலுக்கு எதிரான வாதங்கள் :

35. தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை
36. தனியார் உரிமை இல்லாதது
37. அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல்
38. அதிகமான நிர்வாக செலவு
39. முன்கணிப்பதில் உள்ள சிரமங்கள்.

## 29. புள்ளியியலின் இயல்பும் மற்றும் எல்லைகளை விளக்குக :

**இயல்புகள் :**

1. புள்ளியியலில் அறிவியல், கலையியல் இரண்டின் தன்மைகளும் கலந்து இருக்கின்றன.
2. முறைபடுத்தப்பட்ட தொகுபின் அறிவியலாக காண்கிறோம்
3. விவரங்களை திரட்டுவது, அட்டவணையிடுவது போன்றவற்றை செய்கின்றது.

### 30. புள்ளியியலின் பரப்பு / எல்லை :

1. புள்ளியியலும், பொருளியலும்
2. புள்ளியியலும், வணிகமும்
3. புள்ளியியலும், கல்வியியலும்
4. புள்ளியியலும், திட்டமிடுதலும்
5. புள்ளியியலும், மருத்துவமும்
6. புள்ளியியலும், சுற்றுசுழலும்.

Prepared B y

அ. ரகுமத்துல்லா, M.A, M.Phil, B.Ed., MLISc., PGDCM.,

முதுகலை பொருளியல்

அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, இரெகுநாதபுரம்

இராமநாதபுரம்- மாவட்டம்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com